# பெண்கள், ஒதுக்கீடு மற்றும் பத்திரிகை

## 2018 உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பில் ஊடகச் செய்தியிடல்

புரட்டாதி 2017 முதல் மார்கழி 2018 வரை உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கான வரலாற்றுச் சிறப்புமிக்க 25 வீதமான ஒதுக்கீடு தொடர்பான பத்திரிகை செய்தியிடல் குறித்த ஓர் ஆய்வு

WMC பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு

Norwegian Embassy
*Colombo*

# பெண்கள், ஒதுக்கீடு மற்றும் பத்திரிகை: 2018 உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் ஊடகச் செய்தியிடல்

புரட்டாதி 2017 முதல் மார்கழி 2018 வரை உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கான வரலாற்றுச் சிறப்புமிக்க 25 வீதமான ஒதுக்கீடு தொடர்பான பத்திரிகை செய்தியிடல் குறித்த ஓர் ஆய்வு


முதற் பதிப்பு _ 2021

**பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு**

| | |
|---|---|
| எழுதியவர்: | **இரோமி பெரேரா** |
| ஆய்வாளர்கள்: | **ஷாமா ரணவன, துஷாரி மடஹாபொல மற்றும் எச். இந்துமதி** |
| தொகுத்தவர்கள்: | **குமுதினி சாமுவெல் மற்றும் சன்சியா பிறவுன்** |
| வடிவமைப்பு: | **எம்.எஸ்.ரி. கௌரி** |
| அச்சு: | **நியோ கிராபிக்ஸ்** |
| ஆதரவளிப்போர்: | **றோயல் நோர்வே தூதரகம்** |

Norwegian Embassy
*Colombo*

வெளியீடு:

WMC



**பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு**
56/1இ சரசவி ஒழுங்கை, காசல் வீதி,
கொழும்பு 8, இலங்கை

**மின்னஞ்சல் :** *wmcsrilanka@womenandmedia.org*

**இணையம்** : *womenandmedia.org*

**Facebook:** *https://www.facebook.com/womenandmediacollective*

**Twitter:** *https://twitter.com/womenandmedia*



ISBN 978-624-5868-01-8

# உள்ளடக்கம்

நிறைவேற்றுச் சாரம்சம்...................................... 05

அறிமுகம்...................................................... 08

முறையியல்.................................................... 09

பிரதான கண்டுபிடிப்புகள்.................................... 10

பத்திரிகைகள் எவ்வாறு செய்தியிடல் செய்தன?........ 13

அறிக்கைப்படுத்தலில் பிரதான விடயங்களும், பலவீனங்களும் 24

பரிந்துரைகள் மற்றும் சிறந்த நடைமுறைகள்............. 26

## அட்டவணைப் பட்டியல்

அட்டவணை 1: அரச மற்றும் தனியார் ஊடகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பத்திரிகைகள்.............................. 09

அட்டவணை 2: தேர்தலை நோக்கியதாக வாராந்தப் பத்திரிகைகளில் வெளியான அறிக்கைகளின் எண்ணிக்கை... 25

## உருக்களின் பட்டியல்

உரு 1: புரட்டாதி 2017 மார்கழி 2018 அறிக்கைகளின் எண்ணிக்கை 10

உரு 2: பத்திரிகைச் செய்திகளின் எண்ணிக்கை................. 11

உரு 3: அறிக்கைகளின் வகைகள்.................................. 11

உரு 4: முன்பக்க அறிக்கைகள்..................................... 12

# அணிந்துரை

2018ஆம் ஆண்டு மாசி மாதம் நடைபெற்ற உள்ளூ ராட்சிச் சபைத் தேர்தல்கள் மிகவும் முக்கியமானதாகும். 2012ஆம் ஆண்டு உள்ளூராட்சிச் சபை மட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டு, 2017ஆம் ஆண்டு திருத்தப்பட்ட புதிய கலப்புத் தேர்தல் முறையின் கீழ் நடைபெற்ற முதலாவது தேர்தலாக இது உள்ளது. உள்ளூ ராட்சிச் சபைகளில் பெண்களுக்கான 25 சதவீதமான ஒதுக்கீட்டைக் கட்டாயப்படுத்தும் வகையில் இடம்பெற்ற முதலாவது தேர்தலாகவும் இது உள்ளது.

உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 4,486 என்பதிலிருந்து, 8,356 ஆகவும் இது அதிகரித்தது. திருத்தத்தின் பிரிவு 27 எப் இற்கு அமைய, ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபையிலும் மொத்த உறுப்பினர்களில் 25 சதவீதமானோர் பெண் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். முந்தைய வருடங்களில் உள்ளூராட்சி சபைகளில் 1.8 சதவீதமாக இருந்த பெண்கள் பிரதிநிதித்துவத்துடன் ஒப்பிடும்போது, இது ஒரு மிகப் பெரிய வெற்றியாகும்.

இப்பின்னணியில், வரலாற்றுச் சிறப்பு மிக்க பெண்களுக்கான ஒதுக்கீட்டினை அமுல்படுத்துவது தொடர்பான பத்திரிகைச் செய்தியிடல் குறித்து இந்த ஆய்வு கவனம் செலுத்தியது. மூன்று படிநிலைகளில் பத்திரிகைச் செய்திகளை இவ்வாய்வு பார்த்தது. முதலாவது, 2017ஆம் ஆண்டு 16ஆம் இலக்க உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் (திருத்த) சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 2017 உள்ளூ ராட்சி சபைத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட காலமான 2017 புரட்டாதி முதல் கார்த்திகை வரையான காலப் பகுதியாகும். இரண்டாவது படிநிலை, தேர்தற் பிரசாரம், பிரசார காலத்தின்போது எழுந்த சிக்கல்கள், தேர்தற் தினம் ஆகிய 2017 மார்கழி முதல் 2018 மாசி வரையான காலப் பகுதியாகும். மூன்றாவது படிநிலையானது, மாசி 2018 முதல் மார்கழி 2018 வரையான தேர்தலுக்குப் பின்னரான பெண்களுக்கான ஒதுக்கீடு குறித்த ஊடக அறிக்கையிடலைப் புரிந்து கொள்வதற்கான காலப் பகுதியாகும்.

இவ்வாய்வினைத் தொகுப்பதற்குப் பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பானது பலரது ஆதரவினைப் பெற்றது. இவ்வாய்வின் முடிவுகளைக் கற்று, எழுதியமைக்காக இரோமி பெரேராவுக்கு எமது உளங்கனிந்த நன்றிகள். கட்டுரைகளைக் கண்டறிந்து, பகுப்பாய்வு செய்தமைக்காக ஷாமா ரணவன, துஷாரி மடஹபொல மற்றும் எச். இந்துமதி ஆகியோருக்கு எமது விசேட நன்றிகள். இவ்வாய்வினைக் கருத்தாக்கம் செய்து, தொகுத்தமைக்காக குமுதினி சாமுவெல் அவர்களுக்கு எமது நன்றிகள். இவ்வாய்வினைச் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்த இனோகா பிரியதர்சினி மற்றும் இராமச்சந்திரன் பிரியதர்சினி ஆகியோருக்கும் நன்றிகள். பிரதியினைச் சரி பார்த்த சீத்தாரஞ்சனி மற்றும் குகநிதி குகநேசன் ஆகியோருக்கும் எமது நன்றிகள். இவ்வாய்வினை வடிவமைப்புச் செய்த எம்.எஸ்.ரி. கௌரி அவர்களிற்கும் எமது நன்றிகள்.

நோர்வேத் தூதரகத்தின் உதவியுடன் இவ்வாய்வு பிரசுரிக்கப்படுகின்றது. மோனிக்கா சுவென்கெரட் மற்றும் சுந்தரி ஜெயசுந்தர ஆகியோரின் ஒத்துழைப்பு மற்றும் ஆதரவிற்கும் நாம் நன்றி தெரிவிக்க விரும்புகின்றோம்.

கடந்த இருபது வருடங்களாக உள்ளூர் மட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான பல்வேறு உபாயங்களை WMC பயன்படுத்தியுள்ளது. தற்போது, பெண்களின் அரசியற் பிரதிநிதித்துவத்தினை வலுப்படுத்துவதன் மூலம் இலங்கையில் சிறந்த அரசியற் கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதனை நோக்கி WMC செயற்படுகின்றது. உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கான 25 வீதமான கட்டாய ஒதுக்கீட்டைப் பாதுகாக்கும் குறிக்கோளுடன் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டது.

**சன்சியா பிறவுன்**
நிகழ்ச்சி அதிகாரி
பெண்கள் மற்றும்
ஊடக் கூட்டமைப்பு,
தை 2021

# நிறைவேற்றுச் சாரம்சம்

- உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்குச் சட்டப்பூர்வமாக நிர்ணயிக்கப்பட்ட 25 சதவீத ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துதல், அது சார்ந்த அறிவைக் கட்டியெழுப்புதல் மற்றும் அரசியலிற் பெண்களின் பிரதிநிதித்துவம் பற்றிய அறிவுப் பகிர்வு மற்றும் உறுதியான நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் அவசியம் ஆகியன சார்ந்த செய்தியிடலின் அடிப்படையில் இவ்வாய்வு நடத்தப்பட்டது.

- இவ்வாய்வு புரட்டாதி 2017 _ மார்கழி 2018 காலத்திற்கான பத்திரிகை அறிக்கையை உள்ளடக்கியது. சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய ஒவ்வொரு மொழிக் குழுக்களிலும் நான்கு பத்திரிகைகள் (இரண்டு நாளாந்த மற்றும் இரண்டு வாராந்த) இவ்வாய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. அரச மற்றும் தனியார் ஊடகங்களின் முதன்மைப்படுத்தற் செய்தியிடலை உள்ளடக்கும் நோக்கத்துடன் பத்திரிகைகள் அடையாளங் காணப்பட்டன. ஆங்கில மொழியில், சன்டே டைம்ஸ், சன்டே ஒப்சர்வர், டெய்லி மிரர், டெய்லி நியூஸ் என்பனவும், சிங்கள மொழியில், தினமின, சிலுமின, சன்டே லங்காதீப மற்றும் லங்காதீப என்பனவும், தமிழ் மொழியில், ஞாயிறு வீரகேசரி, ஞாயிறு தினகரன், தினகரன் மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளும் தெரிவு செய்யப்பட்டன.

- புரட்டாதி 2017 _ மார்கழி 2018 ஆய்வு காலப்பகுதியில், மூன்று மொழிகளிலும், 12 பத்திரிகைகளிலும் வெளியான பெண்களுக்கான இட ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட 415 அறிக்கைகள் கண்டறியப்பட்டன. அவற்றில் 117 அறிக்கைகள் ஆங்கிலப் பத்திரிகைகளில் இருந்தும், 148 அறிக்கைகள் சிங்களப் பத்திரிகைகளில் இருந்தும், 150 அறிக்கைகள் தமிழ்ப் பத்திரிகைகளில் இருந்தும் பெறப்பட்டன. மாசி 2018ஆம் ஆண்டு தேர்தற் காலப்பகுதியின் போது (மார்கழி 2017 _ தை 2018), பெண்களுக்கான ஒதுக்கீடு தொடர்பான அல்லது அதனைக் குறிப்பிடும் அறிக்கைகளின் எண்ணிக்கை அதிகமாகவும், மாசி 2018இல் மிக அதிகமாகவும், அடுத்து வரும் மாதங்களில் குறைந்து சென்றதனையும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

- இக்காலப்பகுதியில் வெளியான அறிக்கைகளின் வகைகளைப் பார்க்கும்போது, அரைவாசிக்கும் மேற்பட்டவை அதாவது 242 அறிக்கைகள் செய்தியிடலாக இருந்தன. எஞ்சியவற்றில் 79 விவரண அறிக்கைகளும், 43 நேர்காணல்களும், 28 வர்ணனைகளும், 24 ஆசிரியர் தலையங்கங்களுமாக இருந்தன. 415 அறிக்கைகளில், 30 அறிக்கைகள் முன்பக்கத்திலும், அவற்றில் 15 அறிக்கைகள் ஆங்கிலப் பத்திரிகைகளிலும், அவற்றிலும் 10 அறிக்கைகள் மாசி 2018 காலப் பகுதியிலும் வெளியாகியிருந்தன. சிங்களப் பத்திரிகைகளில் வெளியான 9 முன்பக்கச் செய்திகளில், 6 அறிக்கைகள் மாசி 2018 காலப்பகுதியிலும், தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியான 6 முன்பக்கச் செய்திகளில், 3 அறிக்கைகள் தை 2018இலும் வெளியாகியிருந்தன. சித்திரை 2018இல் ஞாயிறு வீரகேசரியில் வெளியாகியிருந்த ஒரு முன்பக்கச் செய்தியைத் தவிர, மேற்குறிப்பிட்ட எந்தவொரு வாராந்தப் பத்திரிகைகளும், முன்பக்கச் செய்தியைக் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

- புரட்டாதி 2017 - மார்கழி 2018 முதல் பத்திரிகை அறிக்கையைப் பார்க்கும்போது, பெண்களின் ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதற்கான தகவல்களை மூன்று முக்கிய கட்டங்களாகப் பிரிக்கலாம். முதலாவது புரட்டாதி- கார்த்திகை 2017 காலகட்டம், இது 2017ஆம் ஆண்டு 16ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (திருத்தம்) சட்டம் மற்றும் மாசி 2018 உள்ளூராட்சித் தேர்தல்களின் அறிவிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது, இது 25 வீதமான ஒதுக்கீடு செயல்படுத்தப்பட்ட முதல் தேர்தலாகும். இரண்டாவது மார்கழி 2017 - மாசி 2018 காலகட்டம், இது தேர்தற் பிரசாரம் மற்றும் தேர்தலுக்கு முன்னதாகத் தொடர்புடைய பிரச்சினைகள் மற்றும் மாசியில் நடைபெற்ற தேர்தலை உள்ளடக்கியது. மூன்றாவது தேர்தலுக்குப் பிந்தையது, அங்கு ஒதுக்கீட்டைச் செயல்படுத்துவது தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அனைத்து சபைகளுக்கும் 25 வீதமான பிரதிநிதித்துவம் இருப்பதை உறுதி செய்வதில் சில சவால்கள் உள்ளன.

- ஆவணி 2017இல் பாராளுமன்றத்தால் 2017ஆம் ஆண்டு 16ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத்

தேர்தல்கள் (திருத்தம்) சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, பத்திரிகைகளில் வெளிவந்த தகவல்கள், இச்சட்டம் என்ன மாற்றங்களைக் கொண்டுவரும் என்பது தொடர்பில் நேர்காணப்பட்டவர்களில் பலர் முற்போக்கான அம்சம் என்று பாராட்டினர். இக்கட்டுரைகளில் உள்ளூ ராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கான அமைச்சர் பைசர் முஸ்தபா மேற்கோள் காட்டப்படுகிறார் அல்லது நேர்காணல் செய்யப்படுகிறார். அங்கு திருத்தங்களின் உணர்வைப் பாதுகாப்பதற்கு அனைத்து அரசியற் கட்சிகளையும் அவர் அழைக்கிறார். பல கட்டுரைகளில் பெண்களிற்கான ஒதுக்கீட்டின் முக்கியத்துவம் குறித்துப் பேசிய அரசாங்கத்தின் மற்றைய உறுப்பினர்களுடனான நேர்காணல்களும் இடம்பெற்றன. இச்சட்டம் நிறைவேற்றப்படுவது தொடர்பாகப் பெண்கள் யாரும் பேட்டி காணப்படவில்லை. மேலும் மூன்று மொழிகளிலும் மேற்கோள் காட்டப்பட்ட ஆண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கீட்டின் முக்கியத்துவம் குறித்துக் கருத்துத் தெரிவித்தனர். இலங்கையில் உலகின் முதல் பெண் பிரதமரும் ஒரு பெண் ஜனாதிபதியும் இருந்தபோதிலும், அனைத்து மட்டங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் - உள்ளூர், மாகாண மற்றும் பாராளுமன்றம் - குறிப்பாகத் தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகவும் மோசமாக இருந்தது என்பதையும் மூன்று மொழிகளிலும் உள்ள பல கட்டுரைகள் சுட்டிக்காட்டின.

- உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னதாகப் பிரசாரத்தின்போது, குறிப்பாக ஆங்கில ஊடகங்களில் பெரும்பாலான தகவல்கள் தேர்தல் வன்முறையைப் பற்றியதாக இருந்தன. தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் சம்பவங்கள், அறிக்கைகள் மற்றும் புதுப்பிப்புகள் - சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (PAFREL)இ தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (CMEV), சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களுக்கான பிரசாரம் (CaFFE), பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு (WAN) போன்ற சமூகக் குழுக்களின் அறிக்கைகளும், பெண் வேட்பாளர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான விசாரணைகள் மற்றும் அத்தகைய வன்முறைகளுக்கு எதிராக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றிய எச்சரிக்கைகள் குறித்துத் தேர்தல் ஆணைக்குழுவின் பல அறிக்கைகளும் இருந்தன. தேர்தல் ஆணைக்குழுவின் அறிக்கைகளில் பெண்களுக்கு எதிரான வன்முறை நடந்த பகுதிகளில் தேர்தல் ஒத்தி வைக்கப்படும் என்ற எச்சரிக்கையும் அடங்கியிருந்தது.

மூன்று மொழிகளிலும் பாதுகாப்பு என்பது வன்முறைக்குக் கூடுதலாகப் பிரசார காலத்தில் பெண் வேட்பாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் எடுத்துக்காட்டுகிறது. இச்சவால்கள் உண்மையில் வேட்புமனுக்கள் பெறுவதிலிருந்து பெண்கள் போட்டியிடுவது கடினம். அரசியற் கட்சிகளின் ஆதரவு இல்லாமை, தொடர்புடைய பட்டியல்களில் தங்கள் பெயர்களைப் பெறுவதில் உள்ள சிரமம் மற்றும் முஸ்லீம் பெண் வேட்பாளர்கள் எதிர்கொள்ளும் குறிப்பிட்ட பிரச்சினைகள் வரை இருந்தன. இவ்வறிக்கையானது முக்கியமாகத் தேர்தற் கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் சிவிற் சமூகக் குழுக்களின் அறிக்கைகள் மற்றும் பத்திரிகைப் புதுப்பிப்புகளால் இயக்கப்படுகிறது. அவர்கள் பெண்கள் வேட்பாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களை முன்னிலைப்படுத்தக் குறிப்பிட்ட பகுதிகளில் சவால்கள் மற்றும் சிக்கல்களின் எடுத்துக்காட்டுகளை வழங்கினர்.

- தேர்தலுக்கு முன்னதாகச் சிங்கள மற்றும் தமிழ் ஊடகங்களில் தேர்தலிற் போட்டியிடும் பெண் வேட்பாளர்கள் குறித்து ஏராளமான தகவல்கள் வந்தன. இச்செய்தியிடலில் சில வேட்பாளர்களின் சுயவிவரங்கள், நேர்காணல்கள் அல்லது அம்சங்கள், அவர்கள் ஏன் போட்டியிடுகிறார்கள், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் என்ன என்பதைப் பற்றிப் பேசினர். இவ்வகையான செய்தியிடல் குறிப்பாக ஆங்கிலப் பத்திரிகைகளில் இல்லை. இக்கட்டுரைகள் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையிற் பெண்களின் பிரதிநிதித்துவம், இலங்கையின் பெண்களின் அரசியல் வரலாறு மற்றும் இலங்கைக்கு ஒதுக்கீடு ஏன் முக்கியமானது என்பதையும் விவாதித்தது.

- குறிப்பாகத் தமிழ் ஊடகங்கள் தேயிலைத் தோட்டத் துறையைச் சேர்ந்த பெண்கள் தேர்தலிற் போட்டியிடுவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தன. மேலும் அரசியற் கலாசாரத்தை மாற்றுவதற்கும் தோட்டத் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் அவர்கள் போட்டியிட ஊக்குவிக்கப்பட்டனர். சில நேர்காணல்கள் மற்றும் அம்சங்கள் தோட்டத் துறையிலிருந்து பெண்கள் போட்டியிட ஒதுக்கீடு மட்டும் உதவாது என்ற உண்மையை எடுத்துக்காட்டுகின்றன. ஏனெனில் அவர்கள் வாழும் ஆணாதிக்க சமூகம் அவர்களுக்கு ஒருபோதும் தலைமைப் பதவிகளை வழங்கவில்லை. இது அரசியலில் மட்டுமானதல்ல. எனவே, கட்சிகள் தலைமைத்துவ வளர்ச்சியில் முதலீடு செய்ய வேண்டியிருக்கும். ஒட்டுமொத்தமாக அரசியற் கட்சிகள் மற்றும் பெண் அரசியல்வாதிகளுடன் தமிழ் ஊடகங்களில் ஒதுக்கீட்டின் முக்கியத்துவம் அல்லது தேர்தலில் போட்டியிடும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் அதிக நேர்காணல்கள் இருந்தன.

- ஒரு சில சபைகள் சட்டத்தின் விதிகளின்படி 25 வீதமான ஒதுக்கீட்டைப் பூர்த்தி செய்ய முடியாமற் போனதாலும், சபையை அமைப்பது தொடர்பாக முடியாமற் போனதால், தேர்தலுக்குப் பிந்தைய செய்தியிடலில் பெரும்பகுதி ஒதுக்கீட்டைச் செயற்படுத்துவதில் உள்ள சிரமம் குறித்து இருந்தது. தேர்தல் ஆணையாளருடனான அறிக்கைகள் மற்றும் நேர்காணல்களில் இவ்விரண்டு பட்டியல் முறைமை தொடர்பிலும் குற்றம் சாட்டப்பட்டது. நாட்கள் செல்லச் செல்ல,செய்தியிடல், ஒதுக்கீட்டின் எதிர்காலத்தைச் சுற்றியதாக அமைந்திருந்தது. சில செய்தியிடல்கள் அடுத்த தேர்தலுக்கான ஒதுக்கீட்டை அமுல்படுத்துவதற்கு முன் இத்தேர்தலில் இருந்தான பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டது. தெளிவுக்காகச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டனர். அமைச்சர் முஸ்தபா மற்றும் மேயர் ரோஸி சேனநாயக்க போன்ற முக்கிய நபர்கள் ஒதுக்கீட்டை ஆதரித்து அறிக்கைகளை வெளியிடுகையில், பெண்களுக்கான 25 வீதமான ஒதுக்கீட்டைக் குறைக்கத் தாங்கள் தலை வணங்கமாட்டோம் என்று அமைச்சர் முஸ்தபா கூறியதோடு, இவ்வொதுக்கீடு நடைமுறைக்கு ஏற்றதல்ல என்று மற்றவர்கள் தெரிவித்தனர். தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, இச்சட்டபூர்வ மோசடிகள் தொடர்பில் சட்டமா அதிபரை ஆரம்பத்தில் இருந்தே எச்சரித்ததாகக் கூறினார்.

- சிங்கள மற்றும் தமிழ் ஊடகங்களில், குறிப்பாக, லங்காதீப (7 கட்டுரைகள்), வீரகேசரி (16 கட்டுரைகள்) மற்றும் தினகரன் (6 கட்டுரைகள்) ஆகியவற்றில், உள்ளூராட்சி மன்றங்களில் ஒதுக்கீடு அமுலாக்கம் எவ்வாறு செயற்படுகிறது என்பதைப் பற்றிய ஏராளமான பின்தொடர்வுகள் தொடக்கக் கூட்டங்கள், நாடு முழுவதிலுமுள்ள பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களின் குறிப்பிட்ட அறிக்கைகள் போன்றவற்றில் இருந்தன. இக்கூட்டங்களின் அறிக்கைகளில் பெண் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எவ்வாறு வெளிப்படுத்தினார்கள், பொதுவாக அவர்கள் பங்கேற்றல், எடுக்கப்பட்ட முடிவுகள் ஆகியவை அடங்கும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்களுடன் தேர்தலுக்குப் பிந்தைய அனுபவங்கள் மற்றும் ஒதுக்கீட்டின் வெற்றி குறித்துத் தமிழ் ஊடகங்கள் பல நேர்காணல்களைப் பிரசுரித்திருந்தன.

- தேர்தற் கண்காணிப்பு அமைப்புகளிலிருந்து பத்திரிகைகள் அல்லது ஊடக நிறுவனங்கள் பொதுவாகப் பெரிதும் பயனடைகின்றன என்பது தெளிவாகிறது. தேர்தல் வன்முறை தொடர்பான பெரும்பாலான தகவல்களும், எச்சட்டங்கள் மீறப்பட்டன மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய தகவல்களும் இக்குழுக்களால் மீண்டும் வலியுறுத்தப்பட்டு அதற்கேற்ப அறிக்கைகள் தயார் செய்யப்பட்டன. இருப்பினும், தமிழ் ஊடகங்களுடன் ஒப்பிடும்போது ஆங்கில ஊடகங்களில் இவ்வறிக்கை அடிக்கடி காணப்பட்டது. அதாவது மூன்று மொழிகளிலும் தகவற் பாய்ச்சலைக் கண்காணிப்பு அமைப்புகள் உறுதி செய்ய வேண்டும். தேர்தற் காலங்களில் புகாரளிக்கும்போது தமிழ் ஊடகங்கள் சுயாதீன கண்காணிப்பு அமைப்புகளை அதிகம் பயன்படுத்த வேண்டும்.

- பத்திரிகை நிருபர்களால் மிகக் குறைவான பகுப்பாய்வு உள்ளதோடு, கணிசமான பகுப்பாய்வுகளில் பெரும்பாலானவை சிவிற் சமூக அமைப்புகளிலிருந்தோ அல்லது ஆர்வலர்கள் அல்லது கொள்கை வகுப்பாளர்களுடனான நேர்காணல்கள் மூலமாகவோ வருகின்றன. எடுத்துக்காட்டாக, ஆங்கிலப் பத்திரிகைகளில் விரிவாக வெளியிடப்பட்ட பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பின் (WAN) அறிக்கைகள், குறிப்பாகப் பெண் வேட்பாளர்களுக்கு எதிரான வன்முறைகளைப் பார்க்க வேண்டிய வழிகளைப் பற்றி விவாதிக்கின்றன. முஸ்லீம் வேட்பாளர்கள் மற்றும் இணையவழி வெறுப்புப் பேச்சு. அத்தகைய அறிக்கைகள் மற்றும் நேர்காணல்களுக்கு வெளியே ஆழமான பகுப்பாய்வைக் காண முடியாது.

- வேட்பாளர்களின் தகுதிகள் மற்றும் திறன்களைப் பற்றி விவாதிக்கப்பட்ட பெண் வேட்பாளர்களைப் பற்றிப் புகாரளிப்பதில், நேர்காணலில் பங்கேற்றவர்களில் பெரும்பாலானோர் பெண் வேட்பாளர்கள் தகுதி மற்றும் கல்வி கற்றவர்களாக இருக்க வேண்டும் என்றும், அரசியல்வாதியின் தாய், சகோதரி அல்லது மனைவியாக இருத்தல் மட்டும் போதுமானதல்ல என்றும், எந்தவொரு நேர்காணலிலும் அல்லது கட்டுரைகளிலும் ஆண்கள் ஒரே தரத்தில் இருக்கிறார்களா என்பதையும், அலுவலகத்தில் அல்லது ஆண் வேட்பாளர்களில் ஆண்களின் பொருத்தத்தைக் கேள்விக்குட்படுத்துவதா அல்லது ஆழமாக வேரூன்றியுள்ள அரசியல் கலாசாரத்தின் தற்போதைய ஒற்றுமை என்ற தலைப்பில் விவாதிக்கக் கூடிய வேறுபட்ட கதை அல்லது பகுப்பாய்வு இல்லை.

- தேர்தலுக்கு முன்னதாக சில மாதங்களில், பெரும்பாலான வாராந்த பத்திரிகைகளில் ஒதுக்கீடு அல்லது பெண்களின் பிரதிநிதித்துவம் குறித்து மிகக் குறைவான அல்லது எத்தகவலும் இல்லை. நாளாந்தப் பத்திரிகைகளுடன் ஒப்பிடும்போது மக்கள் அதிக வாராந்த பத்திரிகைகளைப் படிக்க முனைவதால், ஆழமான பகுப்பாய்வுக் கட்டுரைகள் வாராந்தப் பத்திரிகைகளில் அதிகம் இருக்க வேண்டும்.

# அறிமுகம்

பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு (WMC)ஆல் செயற்படுத்தப்பட்ட 'மனதை மாற்றுதல்: உள்ளடக்கிய ஆளுகை வலுப்படுத்துதல் மற்றும் அரசியலிற் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான உறுதியான நடவடிக்கை' குறித்த பணியின் ஒரு கூறாக இவ்வறிக்கை அமைகின்றது. இப்பத்திரிகை ஆராய்ச்சி, உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கான 25 வீதமான ஒதுக்கீட்டை அறிவுறுத்துவதற்கும், அரசியலிற் பெண்களின் பிரதிநிதித்துவம் குறித்த அறிவைப் பகிர்வதற்கும் மற்றும் உறுதியான நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் அவசியத்திற்கும் நடத்தப்பட்டது.

அரசியல் நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக இலங்கையில் ஒரு ஜனநாயக மற்றும் நெறிமுறை அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கான மூன்று முக்கிய சவால்களை றுஆஊ மேற்கொண்ட அரசியலில் பெண்கள் மீதான ஒட்டுமொத்தப் பணிகள் முயல்கின்றன. முதலாவது அரசியலில் பெண்களின் குறைவான பிரதிநிதித்துவம் மற்றும் பெண்களின் அரசியற் பிரதிநிதித்துவத்தின் அதிகரிப்புக்கு ஆதரவாக ஒரு பொது உரையாடலை உருவாக்க வேண்டிய அவசியம். இரண்டாவதாகப் பெண்களின் அரசியற் பங்கேற்பு மற்றும் பாராளுமன்ற அரசியல் உட்பட அரசியலில் ஈடுபடுவதற்கான பெண்களின் திறனைப் பற்றிய உணர்வுகள் மற்றும் பாராளுமன்றத்தில் பெண்களின் ஈடுபாட்டை வலுப்படுத்தும் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் ஆகியவை உள்ளன. மூன்றாவதாக உள்ளூராட்சி அதிகாரிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகளின் திறனை அதிகரிக்க முயல்கிறது (தற்போதைய 2 வீதம் முதல் 25 வீதம் வரை அதிகரிப்பு) அவர்களில் பெரும்பாலானோர் உள்ளூர் அரசாங்கத்திற்குப் புதியவர்களாக இருப்பார்கள்.

2017ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தற் சட்டத்தில் ஒரு திருத்தம் (2017 ஆம் ஆண்டின் 16 ஆம் தேதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (திருத்தம்) சட்டம்) ஒரு விகிதாசார பிரதிநிதித்துவ முறையின்படி உள்ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதை உறுதி செய்தது, அங்கு 60 வீதமான உறுப்பினர்கள் ஒற்றை உறுப்பினர் அல்லது பல உறுப்பினர் தொகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். அத்துடன் தொகுதி அடிப்படையிலான பிரிவு இல்லாமல் "கூடுதல் நபர்கள்" என்று அழைக்கப்படும் பட்டியலிலிருந்து 40 வீதம் திரும்பப் பெறப்படுகிறார்கள். உள்ளூராட்சி மன்றத்தில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 4,486 இலிருந்து சுமார் 8,356 உறுப்பினர்களாக உயர்த்தப்பட்டது. திருத்தத்தின் பிரிவு 27 அடிப்படையில், ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் உள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 25 வீதமான பெண்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். உள்ளூராட்சி சபைத் தேர்தற் சட்டத்தில் இந்த உறுதியான விதிகள், [1]உள்ளூராட்சி சபைகளில் 25 வீதமான இடங்களைப் பெண்களுக்கு உறுதி செய்தது. இவ்வாய்வில் இது பெண்களின் ஒதுக்கீடு என அழைக்கப்படும். ஒதுக்கீடு நடைமுறையில் இருப்பதால், மாசி 10, 2018 அன்று உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்து உள்ளூராட்சி சபைகள் அல்லது உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் எண்ணிக்கை 89 இலிருந்து 1,991[2] வரை அதிகரித்தது. 2018 தேர்தல்களில் கொழும்பு நகரசபைக்கு முதற் பெண் மேயராக ரோஸி சேனநாயக்க நியமிக்கப்பட்டார்[3].

இவ்வறிக்கைக்கான ஆராய்ச்சியை ஷாமா ரணவன, துஷாரி மடஹபொல மற்றும் மனித வள மேம்பாட்டு மையம், விழுது ஆகியோர் நடத்தினர்.

1. https://groundviews.org/2018/02/07/the-significance-of-the-25-quota-for-women-in-local-government/
2. https://www.colombotelegraph.com/index.php/governments-womens-quota-a-total-success/
3. https://www.democracyspeaks.org/blog/empowering-female-councilors-sri-lanka

# முறையியல்

இவ்வாய்வு புரட்டாதி 2017 - மார்கழி 2018 காலத்திற்கான பத்திரிகை அறிக்கைகளின் அடிப்படையிலானதாகும். சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய ஒவ்வொரு மொழிக் குழுக்களிலும் நான்கு பத்திரிகைகள் நாளாந்த மற்றும் வாராந்த அடிப்படையில் இரண்டு வாரப் பத்திரிகைகள், இரண்டு நாளாந்தப் பத்திரிகைகள் ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. அரச மற்றும் தனியார் பத்திரிகை ஊடகங்கள் உள்ளடங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அடையாளம் காணப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட பத்திரிகைகளின் விபரங்கள் பின்வருமாறு.

தை 2019 முதல் புரட்டாதி 2019 வரை ஒவ்வொரு மொழியிலிருந்தும் தகவல்களைச் சேகரிக்க நியமிக்கப்பட்ட மூன்று ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி காலத்தில் வெளியிடப்பட்ட ஒவ்வொரு பத்திரிகையையும் பார்த்தார்கள். மொத்தம் சுமார் 2,900 பத்திரிகைகளைப் பார்த்தார்கள். இப்பத்திரிகைகள் பொது நூலகம், இலங்கையின் தேசிய நூலகம், பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு அலுவலகத்திற் கிடைக்கும் பிரதிகள், விழுது போன்ற பிற நிறுவனங்களில் கிடைக்கும் பிரதிகள் மற்றும் பத்திரிகைகளின் இணையப் பதிப்புகள் ஆகியவற்றின் மூலம் அணுகப்பட்டன.

பொது நூலகம் மற்றும் தேசிய நூலகத்தில் பத்திரிகைக் காப்பகங்களைப் பயன்படுத்த ஆராய்ச்சியாளர்கள் உறுப்பினர் அட்டையைப் பெற வேண்டியிருந்தது. இவ்விரண்டு நிறுவனங்களில் காப்பகங்களைப் பயன்படுத்தும்போது அவர்கள் எதிர்கொண்ட சில சவால்கள் அ) ஒரு மாதத்திற்கு மட்டுமே பத்திரிகைகளை ஒரே நேரத்தில் அணுக முடியும் ஆ) பொது நூலகம் ஒரு வருட வெளியீட்டிற்குப் பிறகு பத்திரிகைகளைச் சேமிக்கவில்லை இ) தேசிய நூலகம் மட்டுமே அனுமதித்தது. முன்னரே தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையிலான பத்திரிகைகளைப் படிக்க ஒரு நபர் அதிக பத்திரிகைகளை அணுகுவதற்கு பணம் செலுத்த வேண்டியிருந்தது ஈ) இரு இடங்களும் ஆரம்பத்தில் கட்டிடத்தின் உள்ளே மடிக்கணினிகளை அனுமதித்திருந்தாலும், சித்திரை 21, 2019 குண்டு வெடிப்பைத் தொடர்ந்து, இந்த நடைமுறைகள் நிறுத்தப்பட்டன. இரு இடங்களுக்கும் பார்வையாளர்களுக்கான தந்தியற்ற இணைய வசதி (wifi) இணைப்பு இல்லை, இதன் பொருள் தகவல்களைத் தொகுத்த பிறகு, ஆராய்ச்சியாளர் இணையத்தில் கதைகளைச் சரிபார்க்க வேண்டும்.

பத்திரிகைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்கள் கட்டுரைகளைப் பார்க்கும்போது ஒரு விரிதாள் (excel) தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டன. விரிதாள் தரவுத்தளம் பின்வரும் தகவல்களைச் சேகரித்தது -

அ) செய்தித்தாளின் பெயர், வெளியிடப்பட்ட தேதி, கட்டுரையின் வகை (செய்தி கட்டுரை, அம்சம், நேர்காணல் போன்றவை), பக்க எண் போன்ற அடிப்படைத் தகவல்கள்.

ஆ) ஒவ்வொரு கட்டுரையின் சுருக்கம் போன்ற ஒவ்வொரு கட்டுரையும் பற்றிய விரிவான தகவல்கள், கட்டுரையில் ஏதேனும் தகவல்கள் பின்வரும் வகைகளில் வந்துள்ளனவா எனக் கூறப்பட்டன. குறிப்பாக முக்கிய மேற்கோள்கள், தேர்தல் மீறல்கள், பிரசாரம் தொடர்பான தகவல்கள், ஒதுக்கீடு தொடர்பான சிக்கல்கள், செயற்படுத்தல் ஒதுக்கீடு, ஒதுக்கீட்டின் எதிர்காலம் போன்றவையாகும்.

| | வாராந்த | வாராந்த | நாளாந்த | நாளாந்த |
|---|---|---|---|---|
| **ஆங்கிலம்** | சன்டே டைம்ஸ் | சன்டே ஒப்சர்வர்* | டெய்லி மிரர் | டெய்லி நியூஸ்* |
| **சிங்களம்** | இரிதா லங்காதீப | சிலுமின* | தினமின* | லங்காதீப |
| **தமிழ்** | ஞாயிறு வீரகேசரி | ஞாயிறு தினகரன்* | வீரகேசரி | தினகரன்* |

**அட்டவணை 1: அரச மற்றும் தனியார் ஊடகங்களில் தெரிவு செய்யப்பட்ட பத்திரிகைகள்** *அரச ஊடகம்

# பிரதான கண்டுபிடிப்புகள்

புரட்டாதி 2017 _ மார்கழி 2018இன் ஆய்வுக் காலத்தில், பெண்களுக்கான ஒதுக்கீட்டைப் பற்றிய அல்லது அதைப் பற்றிய மொத்தம் 415 கட்டுரைகள் மூன்று மொழிகளிலும் கண்காணிக்கப்பட்ட பன்னிரண்டு பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. இவற்றில் 117 ஆங்கில பத்திரிகைகளிலும், 148 சிங்களத்திலும், 150 தமிழிலும் இருந்தன. மாசி 2018 தேர்தலுக்கு முந்தைய மாதங்களில் பெண்களின் ஒதுக்கீட்டைப் பற்றிய அல்லது குறிப்பிடும் கட்டுரைகளின் எண்ணிக்கை மிக அதிகமாகும், மாசி 2018 இல் உச்சம் அடைந்ததோடு, அடுத்த மாதங்களில் குறைந்து வருகிறது. (உரு 1 ஐப் பார்க்கவும்) பத்திரிகைகளில் கட்டுரைகளின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, மூன்று மொழிகளிலும் வாராந்தப் பத்திரிகைகள் ஒரே எண்ணிக்கையில் பதிவாகியுள்ளன. நாளாந்தப் பத்திரிகை அறிக்கையிடலில், தமிழ் பத்திரிகைகளில் பெண்களுக்கான ஒதுக்கீட்டைப் பற்றிய மேலும் கட்டுரைகள் உள்ளன. சிங்கள பத்திரிகைகள் அதற்கு நெருக்கமாக உள்ளன (உரு 2 ஐப் பார்க்கவும்) .

**உரு 1: புரட்டாதி 2017 - மார்கழி 2018 அறிக்கைகளின் எண்ணிக்கை**



இக்காலகட்டத்தில் வெளியிடப்பட்ட கட்டுரைகளின் வகையைப் பார்க்கும்போது, அரைவாசிக்கும் மேற்பட்ட கட்டுரைகள் செய்தி அறிக்கைகள் (242 கட்டுரைகள்). இதைத் தொடர்ந்து 79 விவரணக் கட்டுரைகள், 43 நேர்காணல்கள், 28 வர்ணனைகள் மற்றும் 23 ஆசிரியத் தலையங்கங்கள் (குறிப்பு உரு 3).

**உரு 2: பத்திரிகைச் செய்திகளின் எண்ணிக்கை**




**உரு 3: அறிக்கைகளின் வகைகள்**




ஆய்வுக்குட்படுத்தப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட 415 கட்டுரைகளில் 30 கட்டுரைகள் முதற் பக்கத்தில் வெளிவந்தவையாகும். 15 கட்டுரைகள் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவந்ததுடன், அவற்றில் 10 கட்டுரைகள் மாசி 2018இல் வெளிவந்திருந்தன. சிங்களப் பத்திரிகைகளில் 9 கட்டுரைகளில் 2018 மாசியில் 6 கட்டுரைகள் வெளி வந்தன. தமிழ்ப் பத்திரிகைகளில் 6 கட்டுரைகளில் 3 கட்டுரைகள் 2018 தை மாதம் வெளி வந்திருந்தன (பார்க்க உரு 4) இக்காலகட்டத்தில் வாராந்த பத்திரிகைகள் எதுவும் முதல் பக்கக் கட்டுரையைக் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஞாயிறு வீரகேசரி தவிர, சித்திரை 2018இல் ஒரு பக்கத்திற்கான விவரணக் கட்டுரையொன்று இருந்தது. இது மஸ்கெலியாவின் முதற் பெண் பிரதேச சபைத் தலைவியைப் பற்றியதாக இருந்தது.

ஆங்கிலப் பத்திரிகைகளில், குறிப்பாக மாசி 2018இன் போது முதற் பக்கத்தில் வெளிவந்த கட்டுரைகள், தேர்தலுக்குப் பின், சபைகளை அமைப்பதில் தாமதம் தொடர்பானதாகவும், தாமதத்திற்கான காரணங்கள் குறித்து மஹிந்த தேசப்பிரியவுடனான நேர்காணல்கள், தேர்தல் ஆணைக்குழு உறுதிப்படுத்த வலியுறுத்தியமை, உள்ளூராட்சி அதிகார சபைகளைத் தாமதமின்றி அமைத்தல், ஒதுக்கீட்டைச் செயற்படுத்துவதில் சட்டரீதியான மோசடிகள் என்பவற்றுடன் உள்ளூ ராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா, ஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவானது கட்டளையிட வேண்டும் என்று கூறியிருந்தார். முதற் பக்கக் கட்டுரைகளில் தேர்தல் வன்முறை தொடர்பான செய்திகள், தேர்தல்களை நடத்துவது, 2017ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சபைகள் தேர்தல் (திருத்தம்) சட்டத்தின் வர்த்தமானி ஆகியவை அடங்கும். மாசி மாதம் முதற் பெண் 'பழங்குடி' உறுப்பினராக, தெஹியத்த கண்டியாவைச் சேர்ந்த டபிள்யூ.எம்.சிரோமலாவினது நியமனம் குறித்து முதற் பக்கச் செய்தியும் கட்டுரையும் வெளி வந்தது[4]. ஒதுக்கீட்டை அமுல்படுத்தும்போது தேர்தல்களுக்குப் பிறகு சபைகளை அமைப்பதில் உள்ள சிக்கல்கள் பற்றியும், தேர்தலுக்கு முன்னதாகப் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பான செய்திகள் பற்றியும் சிங்களப் பத்திரிகையின் முதற் பக்கக் கட்டுரைகள் பெரும்பாலும் இருந்தன. தமிழ்ப் பத்திரிகைகளில், வடக்கில் அரசியற்கட்சிகள் பெண்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் முக்கியத்துவம் குறித்தும், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறைவாக இருப்பதைப் பற்றியும், அத்துடன் பெண்கள் தெரிவு செய்யப்பெறுவதன் முக்கியத்துவம் குறித்துப் பெண் வேட்பாளர்களை மேற்கோள் காட்டும் செய்திகள் குறித்தும் CaFFE இன் நிர்வாக இயக்குநரை மேற்கோள் காட்டி வடக்கில் அலுவலகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் குறிக்கும் செய்திகள் முதற் பக்கத்தில் இடம்பெற்றன.

**உரு 4: முன்பக்க அறிக்கைகள்**




4 *http://www.dailymirror.lk/article/Shiromala-first-Adiwasi-public-representative-145742.html*

# பத்திரிகைகள் எவ்வாறு செய்தியிடல் செய்தன?

புரட்டாதி 2017 - மார்கழி 2018 முதல் பத்திரிகை அறிக்கையைப் பார்க்கும்போது, பெண்களுக்கான ஒதுக்கீட்டை அமுல்படுத்துவதற்கான தகவல்களை மூன்று முக்கிய கட்டங்களாகப் பிரிக்கலாம். முதலாவது புரட்டாதி - மார்கழி 2017 காலகட்டம். இது 2017ஆம் ஆண்டின் 16 ஆம் தேதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (திருத்தம்) சட்டம் மற்றும் மாசி 2018 உள்ளூராட்சித் தேர்தல்கள் பற்றிய அறிவிப்பை உள்ளடக்கியது. இது 25 வீதமான ஒதுக்கீடானது செயற்படுத்தப்பட்ட முதலாவது தேர்தலாகும். இரண்டாவது மார்கழி 2017 - மாசி 2018 காலகட்டம், இது தேர்தற் பிரசாரம் மற்றும் தேர்தலுக்கு முன்னதாகத் தொடர்புடைய பிரச்சினைகள் மற்றும் மாசி மாதத்தின் உண்மையான தேர்தலை உள்ளடக்கியது. மூன்றாவது தேர்தலுக்குப் பிற்பட்டது. அங்கு ஒதுக்கீட்டைச் செயற்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் அனைத்துச் சபைகளுக்கும் 25 வீதமான பிரதிநிதித்துவம் இருப்பதை உறுதி செய்வதில் சிரமம் உள்ளது..

*<u>படிநிலை ஒன்று (புரட்டாதி - மார்கழி 2017)</u>*

*“முந்தைய உள்ளூர் ஆட்சித் தேர்தற் சட்டத்தை மாற்றிய புதிய சட்டம் ஜனநாயகத்தில் ஒரு முன்னேற்றமாகும். முதன்முறையாக இது உள்ளூ ராட்சி அமைப்புகளில் 25 வீதமான பெண்கள் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்துள்ளது. ஆண் ஆதிக்கம் செலுத்தும் அரசியற் கட்சிகள் மற்றும் பெண்களின் அரசியல் நடவடிக்கைகளில் கலாசாரக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் பின்னணியில் இத்தகைய கட்டாய ஒதுக்கீடு அவசியமானது. இது மோசமான முன்னுரிமை அல்லது ‘மனாப்பே (விருப்பு வாக்கு)’ முறையைத் தவிர்த்துவிட்டு, ஒரு கலப்பின முறை மூலம் விகிதாசார பிரதிநிதித்துவத்தின் நன்மைகளைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. முன்னுரிமை வாக்குகளை இரத்து செய்வது தேர்தலை மிகவும் எளிதானதாகவும், வறிய வேட்பாளர்களுக்கு அணுகக்கூடியதாகவும் ஆக்குகிறது. இது பணப் பைகள் மீது தங்கியிருப்பதையும் குறைக்கிறது.”*

*- டெய்லி நியூஸ் விவரணம், புரட்டாதி 2017*[5]

உள்ளூர் சபைகளின் மட்டத்திற் பெண்களுக்கான 25வீத ஒதுக்கீட்டைச் சட்டமாக்கிய 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (திருத்தம்) சட்டம், புரட்டாதி 2017இல் பாராளுமன்றத்தால் மாகாண சபைத் தேர்தல்களை (திருத்தம்) நிறைவேற்றியது. பத்திரிகைகள் இது குறித்து விரிவாக அறிக்கை செய்தன (உள்ளூராட்சி மன்றங்கள் சட்டம்)[6] நேர்காணல் செய்தவர்களில் பலருடன் இது முற்போக்கானது என்று பாராட்டுகிறது. இக்கட்டுரைகளில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் அமைச்சர் பைசர் முஸ்தபா மேற்கோள் காட்டப்படுகிறார் அல்லது நேர்காணல் செய்யப்படுகிறார். அங்கு திருத்தங்களின் உணர்வைப் பாதுகாக்க அனைத்து அரசியற் கட்சிகளையும் அவர் அழைக்கிறார். பெண்களின் ஒதுக்கீட்டின் முக்கியத்துவம் குறித்து பேசிய ஆளும் அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்களையும் பல கட்டுரைகள் நேர்காணல் செய்கின்றன.

*“பொருளாதாரத்தின் முக்கிய அங்கமாக இருக்கும் பெண்கள் பொருளாதாரத் துறையில் உயர்த்தப்பட்டுள்ளனர். பெண்கள் பொருளாதாரம் இருப்பதைப் போலவே அரசியற் சக்தியையும் பலப் படுத்துவார்கள். இது அரசாங்கத்தின் குறிக்கோள். பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதம் கொடுக்கும். மேலும், அரசியல் அரங்கில் அவர்களுக்குப் பலம் கொடுக்கும்.” - புரட்டாதி 1, 2017 அன்று லங்காதீபவில் மேற்கோள் காட்டப்பட்ட பெண்கள் அதிகாரமளித்தல் விருது வழங்கும் நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேசியது.*

இச்சட்டம் நிறைவேற்றப்படுவது தொடர்பாகப் பெண்கள் யாரும் பேட்டி காணப்படவில்லை. மேலும்

*<u>5 http://www.dailynews.lk/2017/09/08/features/127589/lg-polls-and-local-interests</u>*
*6 In this study we concentrated particularly on reportage of the Amendments to the Local Authorities Act.*

மூன்று மொழிகளிலும் மேற்கோள் காட்டப்பட்டார்கள். ஆண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கீட்டின் முக்கியத்துவம் குறித்துக் கருத்துத் தெரிவித்தனர். இலங்கை உலகின் முதற் பெண் பிரதமரும் ஒரு பெண் ஜனாதிபதியும் இருந்தபோதிலும், அனைத்து மட்டங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவம், உள்ளூர், மாகாண மற்றும் பாராளுமன்றம், குறிப்பாகத் தெற்காசியாவுடன் ஒப்பிடும்போது மிகவும் மோசமாகவே இருந்தது என்பதையும், மூன்று மொழிகளிலும் உள்ள பல கட்டுரைகள் சுட்டிக்காட்டின. புரட்டாதி 3, 2017 அன்று வெளியிடப்பட்ட ஒரு கட்டுரையில் சண்டே ஒப்சர்வர், முன்னாள் அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோப்புள்ளே ஒரு ஊடக சந்திப்பைத் தொடர்ந்து மேற்கோள் காட்டப்பட்டார். அங்கு அவர் 25 வீதமான விரிதாள் பெண்களுக்கு வற்புறுத்தியதாகவும், 1,400 இடங்கள் அல்லது 16 வீதம் பெண்களுக்காக இடங்களை மட்டுமே ஒதுக்கிய முந்தைய விதிக்கு எதிராக வாக்களிப்பதாக அச்சுறுத்தியதாகவும் கூறினார்.

*"உள்ளூர் அரசாங்கத்திற்குப் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்தால், நாட்டிலே மாற்றம் செயற்படுத்தப்படும். ஏனைய நாடுகளில் பெண்களின் அரசியற் பிரதிநிதித்துவம் அதிகமாகவே உள்ளது. ஆனால் மற்றைய நாடுகளைப் போலல்லாமல் இலங்கையில் பெண்களின் அரசியற் பங்கேற்புக் குறைவாகவே உள்ளது."*

*- தினகரன் செய்திக் கட்டுரை,*
*கார்த்திகை 2017*

ஆணாதிக்க அரசியல் மற்றும் அரசியற் கட்சி அமைப்பின் கீழ் போட்டியிடுவதில் பெண்கள் எதிர் கொள்ளும் சவால்களைப் பற்றிப் பல கட்டுரைகள் விவாதிக்கப்பட்டன. இது பெரும்பாலும் சிங்கள மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளில் இருந்தன. எதிர்க்கட்சி உறுப் பினர்கள் அல்லது எதிர்க்கட்சி அரசியல்வாதிகளை மேற்கோள் காட்டி சில கட்டுரைகள் இருந்தன, அல்லது மூத்த பத்திரிகையாளர்கள் மற்றும் கல்வியியலாளர்களின் வர்ணனைகள், ஒதுக்கீட்டின் தீங்கு என்று அவர்கள் கருதுவது குறித்து _உறுப்பினர்களின் அதிகரிப்புக்கு ஏற்ப செலவினங்களின் அதிகரிப்பு, 'பொருத்தமான' வேட் பாளர்களைக் கொண்ட தேவைகள் கிராம நலன்களை இதயத்தில் வைத்திருங்கள் எனச் சுட்டிக்காட்டின. அத்தகைய கட்டுரைகளில் எதிர்க்கருத்து எதுவும் இல்லை, இது தற்போதைய ஆண் அரசியல்வாதிகள் இவ்வளவு கோல்களைப் பொருந்துமா என்று கேட்பதாக அமைந்திருந்தது.

*"பெண்களின் பிரதிநிதித்துவத்திற்கான இத்தேவை மாகாண நிர்வாகிகளிடமிருந்தோ அல்லது பெண்க ளிடமிருந்தோ வரவில்லை. ஆனால் கொழும்பு மையப் படுத்தப்பட்ட விவாதங்களால் கிராமங்களில் இருந்து போட்டியிடுவதற்குப் பெண்களைக் கண்டுபிடிப்பதற்கு அரசியற் கட்சிகள் பெரும் முயற்சி எடுக்க வேண்டும். எனவே இது பெண்களின் பிரதிநிதித்துவத்திற்கு ஒரு ஊக்கத்தை அளிக்கும் அல்லது ஜனநாயகத்தில் முன்னோக்கி நகர்த்தும் என்று நினைப்பது முட்டாள்தனம்."*

*- சிலுமினவின் முன்னாள் ஆசிரியர்,*
*சாமர லக்ஷ்மன்குமார, சிலுமின,*
*மார்கழி 2017 எழுதிய வர்ணனை.*

*"சிறப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்குப் பதிலாக, அனைவருக்கும் பயனளிக்கும் ஒரு தேர்தல் முறையை உருவாக்க வேண்டும். தற்போதுள்ள அமைப்பின் கீழ் பெண்கள் மட்டுமல்ல, நேர்மையானவர்கள் கூட வெல்ல முடியாது. அவ்வமைப்புக் குண்டர்களாக இருக்கும். அது ஆண்களுக்கே இடத்தை வழங்கியுள்ளது. எனவே, நல்லதைப் பிரதிபலிக்கும் வகையில் தேர்தல் முறையை மாற்ற முடிந்தால், பெண்களின் பிரதிநிதித்துவமும் பலப்படுத்தப்படலாம். அங்குதான் நாம் செல்ல வேண்டும். இல்லையென்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் பயனற்ற ஆண்களுடன் இணைந்தவர்கள் ஆகிறார்கள். எனவே இது பெண்களுக்கு நன்மை பயக்கும் என்று நான் நம்பவில்லை."*

*- அரசியல் விஞ்ஞான விரிவுரையாளர், மூத்த*
*விரிவுரையாளர் அனுருதா பிரதீப் கரணசூரியவின்*
*கட்டுரை, ஸ்ரீ ஜெயவர்தனபுரப் பல்கலைக்கழகம்,*
*லங்காதீப, மார்கழி 2017.*

மாசி 2018 உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாகத் தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரியவுட னான நேர்காணல்களில், ஒதுக்கீடு எவ்வாறு செயற்படும் என்பது பற்றிய விவரங்களும், ஒதுக்கீட்டைச் செயற் படுத்துவதில் குழப்பத்தைத் தவிர்ப்பது பற்றிய தகவல்களும் அடங்கும். எண்கள் குழப்பமடையவில்லை என்பதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு உள்ளூ ராட்சி மன்றத்துக்கும் வேட்புமனுப் பட்டியலில் பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கையைச் சரியாகத் தேர்வு செய்யத் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது[7]. தேர்தற் கண்காணிப்புக் குழுக்களின் தகவல்கள் தேர்தல் முறைமையின் அடிப்படை மாற்றங்களையும் விளக்கின. புதிய திருத்தங்கள் மூலம்

*7 http://www.sundayobserver.lk/2017/12/10/news/female-candidates-minimum-number-mandatory*

இளைஞர் ஒதுக்கீடு அகற்றப்பட்டுவிட்டதாகவும், இப்போது இளைஞர்களுக்கும் போட்டியிடப் போதுமான இடத்தை அவர்கள் வழங்குவதை உறுதி செய்வது கட்சிகளிடமே இருக்கும் என்பதையும் சுற்றி அறிக்கை வந்தது.

*“எல்லாவற்றையும் சட்டப்படி செய்ய முடியாது. நாங்கள் ஏற்கனவே பெண் பிரதிநிதிகளுக்கு 25 சதவீதமான ஒதுக்கீட்டை வழங்கியுள்ளோம். மேலும், இளைஞர்களுக்கு மீண்டும் 25 சதவீதத்தை வழங்க முடியாது. அரசியற் கட்சிகளுக்கும் சமூகப் பொறுப்புகள் உள்ளன. எனவே, அவர்கள் கட்சி மட்டத்திலிருந்து இளைஞர்களுக்கான ஒதுக்கீட்டை ஒதுக்க வேண்டும்,”*

*- அமைச்சர் பைசர் முஸ்தபா, டெய்லி நியூஸ், புரட்டாதி 2017*[8]

தேர்தல் ஆணையம் அல்லது தேர்தல் கண்காணிப்புக் குழுக்களை மேற்கோள் காட்டிப் பெரும்பாலும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அமைச்சர் பைசர் முஸ்தபாவை மேற்கோள் காட்டிய அறிக்கைகள் அல்லது செய்திகளைத் தமிழ் ஊடகங்கள் மறைக்கவில்லை.

மற்றைய பத்திரிகைகளுடன் ஒப்பிடும்போது ஒதுக்கீடு எவ்வாறு செயற்படும் என்பதோடு, அதன் முக்கியத்துவம் குறித்தும் சிங்களப் பத்திரிகைகளில் கூடுதல் கட்டுரைகள் இருந்தன. ஆங்கிலப் பத்திரிகைகள் முக்கியமாக பைசர் முஸ்தபா மற்றும் பிற பாராளுமன்ற உறுப்பினர்களுடனான அறிக்கைகள் மற்றும் நேர்காணல்களை உள்ளடக்கியதாக இருந்துத. அதேநேரத்தில் தமிழ்ப் பத்திரிகைகள் ஒதுக்கீட்டின் முக்கியத்துவத்தையும், நாட்டின் தமிழ் அரசியலில் அதன் தாக்கத்தையும் உள்ளடக்கியதாகவும் இருந்தது. இலங்கையில் பெண்களின் அரசியலின் வரலாறு மற்றும் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கல்வியியலாளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான பேச்சுக்கள் மற்றும் நேர்காணல்களின் மூலம் ஒதுக்கீட்டின் நன்மைகள் குறித்து லங்காதீப போன்ற பத்திரிகைகளில் ஆழமான தகவல்கள் இருந்தன. இச்சட்டம் இயற்றப்படுவதையோ அல்லது ஒதுக்கீட்டின் முக்கியத்துவத்தையோ சுற்றி மக்கள் கருத்தைப் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை

*“எல்.ரீ.ரீ.ஈ காலத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் அச்சுறுத்தல்கள் பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லை. ஆனால் தற்போது துஷ்பிரயோகம் அதிகரித்து வருகிறது. ஒரு பெண்ணின் பார்வையில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு அரசியலிற் பெண்களின் பங்களிப்பு தேவைப்படுகிறது ”*

*- மார்கழி1, 2017, தினகரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனுடன் நேர்காணல்.*

*“கல்விக்கான அணுகலுடன் பெண்கள் எல்லாத் துறைகளிலும் நுழைந்துள்ளனர், இருப்பினும், அரசியலில் அவர்களின் பிரதிநிதித்துவம் இன்னும் போதுமானதாக இல்லை. ஒரு அரசாங்கத்தை மாற்றுவதற்கு அவர்கள் வாக்களிக்க முடிந்தாலும், பாராளுமன்றத்திற் போதுமான பெண்கள் இல்லை. இந்நிலைமையை மாற்றுவதற்கான ஒரு பரீட்சார்த்தத் திட்டமாக, உள்ளூர் அரசாங்கத்தில் குறைந்தபட்ச எண்ணிக்கையிலான பெண்களைச் சேர்க்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சிலர் போட்டியிட்ட பெண்களைக் கண்டுபிடிக்க முடியாது என்று கூறுகிறார்கள். அதற்கு உதவுவதற்கு முடியாது. யாரையாவது கண்டுபிடித்துத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு வைக்க வேண்டும். நோர்வே நாடாளுமன்றத்தில் 50 வீதமான பெண்கள் உள்ளனர். எச்சட்டமும் இல்லாமல் அது உள்ளது. சில ஐரோப்பிய நாடுகளில் குறைந்தது 50 வீதம் அல்லது பெரும்பான்மையான பெண்கள் உள்ளார்கள். இத்தகைய மாற்றங்கள் சட்டம் மற்றும் சமூகத் தலையீடுகள் மூலம் செயற்படுத்தப்பட வேண்டும்,”- புரட்டாதி 10, 2017, தினமினவில் மேற்கோள் காட்டப்பட்ட விசாகா வித்தியாலயத்தின் 100ஆவது ஆண்டு விழாவில் முன்னாள் பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க பேசியது.*

*- படிநிலை 2 (மார்கழி 2017- தேர்தல் தினம், மாசி 2018)*

*படிநிலை 2 (மார்கழி 2017 _ தேர்தல் தினம், மாசி 2018)*

தேர்தலுக்கு முன்னதாக, குறிப்பாக ஆங்கில ஊடகங்களில் தேர்தல் வன்முறை மற்றும் பிரசார காலத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிற பிரச்சினைகள், அரசியற் கட்சிகளின் ஆதரவு இல்லாமை போன்றவை கூறப்பட்டிருந்தன. தேர்தல் வன்முறை தொடர்பான அறிக்கைகளில் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் சம்பவங்கள், அறிக்கைகள் மற்றும் தகவல்கள், சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (PAFREL), தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம் (CMEV), இலவச மற்றும் நியாயமான தேர்தல்களுக்கான பிரசாரம் (CaFFE),

8 http://www.dailynews.lk/2017/09/25/features/129195/exclusion-youth-politics

விரிவான பகுப்பாய்வு ஆகியவை அடங்கும். பெண்கள் செயற்பாடு வலையமைப்பு (WAN) போன்ற சிவில் சமூகக் குழுக்களிடமிருந்து. பெண் வேட்பாளர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களை விசாரிப்பது மற்றும் வன்முறை புகார்களில் செயற்படுவதற்கான எச்சரிக்கைகள் ஆகியவற்றுடன் தேர்தல் ஆணைக்குழுவின் பல அறிக்கைகளும் தெரிவிக்கப்பட்டன. தேர்தல் ஆணைக் குழுவின் அறிக்கைகளில் பெண்களுக்கு எதிரான வன்முறை நடந்த பகுதிகளில் தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்ற எச்சரிக்கையும் அடங்குகின்றன.

*“வாக்களிக்கும் சுதந்திரத்தைத் தடுக்கும் ஏதேனும் தடைகள் இருந்தால், இப்பகுதிகளில் தேர்தல்களை ஒத்திவைப்பதற்குத் தேர்தல் ஆணைக்குழு தயங்காது,” என்றார் தேசப்பிரிய. மாவட்ட அதிகாரிகளும் அப்பகுதிகளை உன்னிப்பாக ஆராய்ந்து வருகின்றனர், மேலும் சில பகுதிகளில் பெண் வேட்பாளர்களுக்குக் கூடுதல் பாதுகாப்புத் தேவைப்பட்டால் செயலகத்திற்குத் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.”,*

*- மகிந்த தேசப்பிரிய 2018 தை 6, டெய்லி நியூஸ் கட்டுரையில் மேற்கோள் காட்டினார்.*

மூன்று மொழிகளிலும் பாதுகாப்பு என்பது வன்முறைக்குக் கூடுதலாக, பிரசார காலத்தில் பெண் வேட்பாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் எடுத்துக்காட்டுகிறது. இச்சவால்கள் உண்மையில் வேட்புமனுப் பெறுவதிலிருந்து தண்டனையின் கலாசாரம் வரை போட்டியிடுவது கடினமானது. அரசியற் கட்சிகளின் ஆதரவின்மை, தொடர்புடைய பட்டியல்களில் அவர்களின் பெயர்களைப் பெறுவதில் உள்ள சிரமம் மற்றும் முஸ்லீம் பெண் வேட்பாளர்கள் எதிர்கொள்ளும் குறிப்பிட்ட பிரச்சினைகள் வரை உள்ளன.

*“குற்றவியல் குற்றச்சாட்டுகளில் குற்றம் சாட்டப்பட்ட அல்லது ரிமாண்ட் செய்யப்பட்ட பெண்கள் போட்டியாளர்கள் யாரும் இல்லை. இருப்பினும், ஆணாதிக்கத்தின் காரணமாக அரசியலில் நுழைய அவர்கள் சவால்களை எதிர்கொள்கின்றனர். தங்கள் சொந்தத் தொகுதியில், ஆண் போட்டியாளர்கள் தேர்தற் பிரசாரத்தின்போது பெண்களின் பெயரை அவதூறு செய்கிறார்கள். எனவே, பெண்கள் வெளியே வந்து தேர்தற் பிரசாரங்களில் ஈடுபட அஞ்சுகிறார்கள்.”*

*- தினகரனில் கட்டுரை, தை 14, 2018.*

